கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

நிதிக் கூற்றுக்கள்

2012.12.31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானது

பொருளடக்கம்

பணிப்பாளர் சபையும் நிறைவேற்று உத்தியோகத்தர்களும்	01 - 02
தலைவரின் மீளாய்வு	03
பணிப்பாளர்களின் அறிக்கை	04– 07
ஆண்டுக்கான செயற்பாடுகள்	08
நிதிக்கூற்றுக்கள்	09 - 12
நிதிக்கூற்றுக்களின் மீதான குறிப்புக்கள்	13 – 52
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	53 – 71
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிள் அறிக்கை மீதான தலைவரின் கருத்துரைகள்	72 - 79

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
2012 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை

தலைவர்	-	திரு. எராஜ் ரி.பெர்ணாண்டோ
தொழிற்படு பணிப்பாளர்	-	திரு.கே.எம்.எம்.ஷாகீர்
பணிப்பாளர்கள்	-	திரு.கே.எம்.ஜயதிலக பணிப்பாளர் – (திறைசேரி பிரதிநிதி) பணிப்பாளர் நாயகம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் பொது திறைசேரி. (2012.09.18 இலிருந்து பதவி விலகியுள்ளார்) திரு.எம்.ஜி.எஸ்.எம்.மொஹமட் ஜவார்ட் திரு.டி.ஏ.புல்ஜான்ஸ். திரு.டி.சி.எல்.லங்காதிலக திரு.எம்.எம்.பீ.கே.மாயாதுன்ன பணிப்பாளர் (அமைச்சு பிரதிநிதி) மேலதிக செயலாளர், (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு (2012.01.01 ஆம் திகதிய கௌரவ. அமைச்சரின் கடிதம் மூலம் நியமிக்கப்பட்டார் -2012.10.26 இலிருந்து பதவி விலகியுள்ளார்) திரு.பி.எம்.சி.கே.பஸ்நாயக்க (2012.01.01 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார் 2012.11.21 இலிருந்து பதவி விலகியுள்ளார்.) திரு.ஜீ.சுனில் சாந்த (2012.10.01 இலிருந்து)

மேலதிக பொது முகாமையாளர்	திரு.விபுல கித்சிறி சில்வா (நிருவாகம்)
நிதிப் பொறுப்பு	எம்.பி.என்.என். சஞ்ஜீவனி
நிதி முகாமையாளர்	திரு.மெரில் பெரேரா
கணக்காய்வாளர்கள்	கணக்காய்வாளர் நாயகம்
வங்கிகள்	இலங்கை வங்கி மக்கள் வங்கி கொமர்ஷல் வங்கி ஹட்டன் நஷனல் வங்கி சம்பத் வங்கி செலான் வங்கி
பதவி செய்யப்பட்ட அலுவலகம்	27, வொக்ஸோல் வீதி, கொழும்பு - 2

தலைவரின் வாழ்த்துச் செய்தி

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் (கூமொதா) தலைவர் என்றவகையில், 2012 ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற மீளாய்வுக்காக வாழ்த்துக் குறிப்பொன்றினை வழங்குவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து சதொச நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து சதொச நிறுவனத்தின் பிரதான தொழிற்பாடுகளான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் பாவனையாளர் நுகர்வுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி மக்களுக்கு கிடைக்கச் செய்தல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளினை நிலையாகப் பேணுதல், இறக்குமதி நடவடிக்கைளினை ஒழுங்கு முறைப்படுத்துதல், உள்நாட்டு உற்பத்திகளினை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளினை முன்னெடுத்தல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் மொத்த வியாபார நடவடிக்கைகளினை விரிவாக்கும் நோக்குடன் வெளிப்படையான நடைமுறை சார்ந்த நடவடிக்கைகளினை முன்னெடுத்தல் போன்ற பல்வேறு விடயங்களில் நாம் பல்வேறு சாதனைகளை அடையப் பெற்றுள்ளோம்.

புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைகளினை அறிமுகப்படுத்துதல், மொத்த விற்பனை தாபனங்களைத் தாபித்தல், நெல் கொள்வனவு மற்றும் மற்றும் அரிசியாக மாற்றும் செயல்முறை, பொருட்களின் இறக்குமதி மற்றும் முகவராண்மை செயற்பாடுகளினை ஆரம்பித்தல் மற்றும் போக்குவரத்து சேவையினை மேம்படுத்துவதனூடாக நிறுவனத்தின் நிதிசார் ஸ்திரத்தன்மையினை விருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளினூடாக நிறுவனங்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்தவகையில், எமது நிறுவனம் லங்கா சதொச நிறுவனத்துடன் வியாபார செயற்பாடுகளினை மேலும் விருத்தி செய்வதற்கும் அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வழங்கலினைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளினை மேற்கொண்டிருந்தது. அத்துடன், லங்கா சதொச வலையமைப்புக்கு பொருட்களினைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளினை வழங்குவதற்குமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மேற்குறித்த அனைத்து நடவடிக்கைகளினையும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குத் தேவையான தலைமைத்துவத்தினையும் வழிகாட்டுதல்களினையும் வழங்கியமைக்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கு தமது ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் நல்கியமைக்காக பணிப்பாளர் சபைக்கும் இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக தமது அயராத உழைப்பினையும் முயற்சிகளையும் வழங்கியமைக்காக அனைத்து பதவியினருக்கும் இவ்விடத்தில் எனது நன்றியறிதல்களினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ரிஸ்வான் ஹமீம்,
தவிசாளர்
2017.08.02

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அறிக்கை.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையானது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி, சமர்ப்பிக்கப்படுகின்றது.

பொது

முதன்மை நடவடிக்கைகள்

1949 ஆம் ஆண்டின் 47 ஆம் இல. சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட சதொச என அழைக்கப்படும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது (கூமொதா) அதன் வியாபார செயற்பாடுகளை 1950, ஜீலை 01 ஆம் திகதி ஆரம்பித்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் முதன்மை நோக்கம், அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த வியாபாரியாக தொழிற்படுதலேயாகும்.

இலங்கையில் நுகர்வோர் மற்றும் பண்ணை சமூகத்தின் நலன்களை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படுகின்ற வியாபார செயற்பாடுகளில் பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டமையின் காரணமாக 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நட்டஈட்டுடன் கூடிய சுய இழைப்பாறல் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.பண்ணை உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையங்கள் மற்றும் நிறுவனத்திற்குச் சொந்தமான அரிசி ஆலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கும் மேலாக, அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு தொடர்பில் அமைச்சரவையினால் முன்வைக்கப்படும் அறிவுறுத்தல்களினைக் கருத்தில் கொண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

01. வியாபார செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்

தாபனத்தின் மதிப்பீடு மற்றும் அதன் நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையின் முக்கிய பகுதியாக விளங்குகின்ற தலைவரின் மீளாய்வில் உள்ளடங்குகின்றன.

அந்தவகையில், நிறுவனத்திற்குச் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் பிரதான வருமான மூலமாக லங்கா சதொச மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் துறையினருடன் புதிதாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளினூடாக பெறப்படுகின்ற வாடகை வருமானம் விளங்குகின்றது.

வாழ்க்கைச் செலவினைக் குறைப்பது தொடர்பில் அமைச்சரவை உப குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, சதொச நிறுவனமானது நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஒத்துழைப்புடன் பண்ணேகமுவ மற்றும் ஹிங்குராகொட அரிசி பதப்படுத்தும்அநிலையங்களின் உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும்

அதன் மூலம் லங்கா சதொச வலையமைப்பினூடாக நியாயமான விலைகளில் பொது மக்களுக்கு உயர்ந்த தரத்தில் வழங்குவதற்கும் முடிந்துள்ளதுடன் இதன் மூலம் சதொச நிறுவனமானது அரசாங்கத்தின் சார்பில் சந்தையில் அரிசியின் விலையினைக் கட்டுப்படுத்துவதிலும் சந்தைச் செயற்பாடுகளின் விலை கட்டுப்பாளராகவும் திகழ்கின்றது.

02. 2012.12.31இலுள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

1.	நிறைவேற்றுநர்கள்	- 11
2.	எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவை	- 51
3.	ஏனைய உரித்தளிக்கப்பட்ட தரங்கள்	- 280

		342
		=====

03. 2012.12.31இலுள்ளவாறான நிறுவனத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

நீதிமன்றம்	2011.12.31 இலுள்ளவாறான தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்	2012 இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்	குறித்த ஆண்டு காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகள்	2012 இல் முடிவுறுத்தப்பட்ட வழக்குகள்	ட்ரயலிலுள்ள வழக்குகள்
உயர் நீதிமன்றம்	11	02	13	01	12
மாவட்ட நீதிமன்றம்	10	05	15	04	11
நீதவான் நீதிமன்றம்	12	05	17	04	13
தொழில் நியாயசபைகள்	09	07 (ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வழக்கு)	16	05	10
ஊழியர் விசாரணைகள்	08	-	08	-	08
நடுவத்தீர்ப்பு	01	-	01	-	01
வழக்குகளினால்	14	01(தொழில் நியாய சபை வழக்கு)	15	-	15
மேன்முறையீட்டு வழக்குகள்	01	01	-	-	02

04. <u>தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு</u>

கூமொதா ஆனது, திரண்ட நட்டங்கள் மற்றும் தொழிற்படு மூலதன பற்றாக்குறைகளான முறையே ரூபா 8885 மில்லியன் மற்றும் ரூபா. 864 மில்லியன் ஆகிய நிதி நெருக்கடியின் காரணமாக கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து எவ்வித உதவுகையினையும் பெற முடியாத நிலையிலிருந்தது. இதன்காரணமாக தாபனத்தினால் கடந்த காலங்களில் நிலவிய

நிதிக் கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தது.எவ்வாறாயினும், மீளாய்வு காலப்பகுதியில், நடைமுறை தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளுக்குத் தேவையான வருமானம் பயன்படுத்தப்படாத கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலமும் பயன்பாடற்ற சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலமும் பெறப்பட்டுள்ளது.அந்தவகையில் பணிப்பாளர்கள், தாபனமானது தொடர்ந்து அதன் வியாபார செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் எதிர்காலத்திலும் அதன் நடைமுறை நிதிக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்தும் செயற்படுமென்ற அடிப்படையில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவினை நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்துவதற்கும் அக்காலப்பகுதியானது எண்ணியுள்ளதுடன் அத்தகைய நிதிக் கூற்றுக்கள் கையெழுத்திட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது பன்னிரண்டு மாதங்களாக இருக்க வேண்டுமெனவும் எண்ணியுள்ளனர்.

05. கணக்காய்வாளர்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. திச்சட்டத்தின் 13(1) பிரிவுடன் இணைந்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(01) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, கணக்காய்வு நிறுவனமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமே இருத்தல் வேண்டும்.

06. நன்றி நவிலல்

நிறைவாக, தாபனத்திற்கு தமது எல்லையல்லா ஆதரவினையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியமைக்காக அதிமேதகு ஜனாதிபதி அவர்கட்கும் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கட்கும் கௌரவ, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கட்கும் மற்றும் அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆண்டு பூராகவும் தமது ஒத்துழைப்பினை நல்கியமைக்காக நிதி அமைச்சின் பதவியினருக்கும் திறைசேரி மற்றும் ஏனைய தொடர்புடைய அமைச்சுக்களின் பதவியினருக்கும் இவ்விடத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவடைகின்றேன்.

எமது தாபனத்தின் மிகவும் முக்கியத்துவம் வாயந்தவர்கள் எமது ஊழியர்களே ஆவர். ஆண்டு பூராகவும் தமது அயராது உழைப்பினை வழங்கியமைக்காக அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நுகர்வோர் சமூகத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தமது தொடர்ச்சியான தலைமைத்துவத்தினை வழங்கி வரும் பணிப்பாளர் சபைக்கும் நியதிச் சட்ட உதவிகளை வழங்கிவருவதற்காக தனியார் துறையினைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கும் எமக்குத் தேவையான நிதி உதவுகைகளையும் நிதிசார் நம்பிக்கையினையும் வழங்கி வரும் வங்கிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

நிதிகூற்றுகளுக்கான குறிப்புகள்

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரியது

கூட்டுறவு மொத்த விற்பனைத்
அகல் விரிவான வருமானக் கூற்று

இலங்கை ரூபாவில் வழங்கப்பட்டுள்ளது 2010

முடிவடைந்த ஆண்டுக்குரியது	குறிப்பு	.ப குறிப்பு	Group 2012	Group 2011	CWE 2012	CWE 2011
வருமானம்	3		324,175,737	185,601,094	217,220,666	127,325,994
விற்பனைகளின் செலவு	4		(268,862,135)	(157,057,799)	(181,930,142)	(101,010,761)
மொத்த இலாபம்			**55,313,603**	**28,543,295**	**35,290,523**	**26,315,233**
ஏனைய இயங்கு வருமானம்	5		192,898,831	141,350,568	190,942,906	140,296,964
நெல் செயற்பாடுகளின் மூலம் இலாபம்	6		24,349,251	40,403,325	24,349,251	40,403,325
நிருவாக செலவினங்கள்		8.1.1	(194,665,359)	(174,331,382)	(184,861,530)	(172,083,935)
விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள்		8.1.2	(18,422,373)	(8,185,061)	(18,410,373)	(8,185,061)
கோளாறுகளுக்கான முன்னேற்பாடுகள்	7		(378,003,569)	-	(378,003,569)	-
செயற்பாடுகளின் மூலம் இலாபம் (நட்டம்)			**(318,529,616)**	**27,780,745**	**(330,692,792)**	**26,746,526**
தேறிய நிதிச் செலவு	9		(343,488,443)	(340,334,382)	(343,518,141)	(340,352,311)
வரி விதிப்புக்கு முந்திய இலாபம் /(நட்டம்)	10		**(662,018,059)**	**(312,553,637)**	**(674,210,933)**	**(313,605,785)**
வருமான வரி செலவினங்கள்	11		(14,607,451)	(68,351)	(13,200,000)	-
ஆண்டிற்கான இலாபம்/நட்டம்			**(676,625,510)**	**(312,621,988)**	**(687,410,933)**	**(313,605,785)**
ஏனைய அகல்விரிவான வருமானம்			-	-	-	-
ஆண்டிற்கான மொத்த அகல்விரிவான வருமானம்/செலவினம்			**(676,625,510)**	**(312,621,988)**	**(687,410,933)**	**(313,605,785)**

அடைப்புக்களில் உள்ள இலக்கங்கள் கழிப்பீடுகள் குறிக்கின்றன.

5 - 35 ஆம் பக்கம் வரையில் உள்ள நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகள் இதன் ஒருங்கிணைந்த பகுதியாகும்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
நிதி நிலைமைகளின் கூற்று

(இலங்கை ரூபாவில் வழங்கப்பட்டுள்ளது)

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரிய	Note	குழுமம் 2012	குழுமம் 2011	CWE 2012	CWE 2011
சொத்துக்கள்					
நடைமுறை அல்லாச் சொத்துக்கள்					
சொத்து பொறித்தொகுதிகள் மற்றும் துணைக் கருவிகள்	12	944,052,941	1,131,001,439	943,638,120	1,130,882,236
கட்டணஞ் செலுத்தப்பட்ட குத்தகைத் காணிகள்	13	1,691,219	2,311,930	1,691,219	2,311,930
புலப்படா சொத்துக்கள்	14	1,073,403	72,642	1,073,403	72,642
துணை நிறுவனங்களுக்கான முதலீடுகள்	15	-	-	20	10
ஏனைய முதலீடுகள்	16	9,923,720	181,852,410	9,923,720	181,852,410
முதலீடுகளுக்கான முற்பணம்	17	121,708,711	121,708,711	121,708,711	121,708,711
மொத்த நடைமுறை அல்லா சொத்துக்கள்		**1,078,449,994**	**1,436,947,132**	**1,078,035,192**	**1,436,827,939**
நடைமுறை சொத்துக்கள்					
பொருட்பதிவேடுகள்	18	285,206,178	137,862,900	285,206,178	137,862,900
வியாபார மற்றும் ஏனைய பெறுகைகள்	19	901,260,861	332,281,702	879,514,438	322,572,495
ஏனைய நிதியில்லா சொத்துக்கள்	20	2,050,834	178,041,714	2,050,834	178,041,714
காசும் காசுக்கு நிகரானவை	21	163,572,602	199,767,152	144,056,894	199,443,619
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**1,352,090,475**	**847,953,469**	**1,310,828,344**	**837,920,729**
மொத்த சொத்துக்கள்		**2,430,540,469**	**2,284,900,600**	**2,388,863,536**	**2,274,748,668**
உரிமைப் பங்குகளும் பொறுப்புக்களும்					
பங்களிப்பு மூலதனம்	22	1,056,590	1,056,590	1,056,590	1,056,590
ஒதுக்குகள்	23	3,255,699,484	4,024,544,031	3,255,699,484	4,024,544,031
நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள்		(10,676,680,043)	(10,541,072,880)	(10,687,711,810)	(10,541,319,225)
மொத்த உரிமை பங்கு		**(7,419,923,969)**	**(6,515,472,259)**	**(7,430,955,736)**	**(6,515,718,604)**
நடைமுறைஅல்லா பொறுப்புகள்					
திறைசேரிக்கு கொடுப்பனவு	24	7,203,167,798	6,879,355,130	7,203,167,798	6,879,355,130
ஓய்வு பயன் கடப்பாடுகள்	25	33,700,618	30,112,068	33,700,618	30,112,068
வங்கி கடன் வாங்கல் (நடைமுறை அல்லா பகுதி)	26	109,431,254	147,131,255	109,431,254	147,131,255
நிதி குத்தகை கடப்பாடு (நடைமுறை அல்லா பகுதி	27	54,417,964	16,057,100	54,417,964	16,057,100
		7,400,717,634	**7,072,655,553**	**7,400,717,634**	**7,072,655,553**
நடைமுறை பொறுப்புக்கள்					
வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	28	1,786,112,350	1,131,053,040	1,768,468,792	1,127,092,656
வங்கி கடன் வாங்கல் (நடைமுறை பங்கு)	26	510,682,404	485,842,404	510,682,404	485,842,404
நிதி குத்தகை கடப்பாடு (நடைமுறை பங்கு)	27	10,454,344	8,590,451	10,454,344	8,590,451
ஏனைய நிதி அல்லா பொறுப்புக்கள்	29	92,054,088	67,821,247	79,228,090	61,876,043
வங்கி மேலதிக பற்று	21	50,443,618	34,410,165	50,268,009	34,410,165
மொத்த நடைமுறை பொறுப்புகள்		**2,449,746,804**	**1,727,717,306**	**2,419,101,639**	**1,717,811,719**
மொத்த உரிமை பங்கும் பொறுப்புகளும்		**2,430,540,470**	**2,284,900,600**	**2,388,863,536**	**2,274,748,668**

இந் நிதிகூற்றுகளின் தயாரிப்பிற்கும் முன்வைப்பிற்கும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பணிப்பாளர் சபை பொறுப்புடையது. இந் நிதிகூற்றுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளது.

....
தலைவர்

....
பணிப்பாளர்

திகதி : ....

கொழும்பு

....
நிதி பிரிவு தலைவர்

அடைப்புக்களில் உள்ள இலக்கங்கள் கழிப்பீடுகள் குறிக்கின்றன.

5 - 35 ஆம் பக்கம் வரையில் உள்ள நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகள் இதன் ஒருங்கிணைந்த பகுதியாகும்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
உரிமை பங்கு மாற்றங்களுக்கான கூற்று

(இலங்கை ரூபாவில் வெளியிடப்பட்டுள்ளது)

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரியது

குழமம்	பங்களிப்பு மூலதனம்	மூலதன ஒதுக்கு	பொது ஒதுக்கு	கடன் குறைப்பு ஒதுக்கு	வாகன பதிலீட்டு ஒதுக்கு	மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	மீள் கட்டமைப்பு ஒதுக்கு ஒதுக்கு	நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள்	மொத்தம்
2011 ஜனவரி 1ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**1,201,386,008**	**2,323,728,130**	**(10,196,589,161)**	**(6,170,251,088)**
முன்னைய ஆண்டு சரி செய்தல்	-	-	-	-	-	-	-	(31,861,731)	(31,861,731)
ஆண்டிற்கான மொத்த அகல்விரிவான செலவினம்	-	-	-	-	-		-	(312,621,988)	(312,621,988)
2011 டிசெம்பர் 31ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**1,201,386,008**	**2,323,728,130**	**(10,541,072,880)**	**(6,514,734,807)**
முன்னைய ஆண்டு சரி செய்தல்	-	-	-	-	-	-	-	3,093,775	3,093,775
ஏனைய சரி செய்தல் (குறிப்பு 1)	-	-	-	-	-	-	(542,164,547)	539,947,981	(2,216,566)
காணி.்.கட்டடங்கள் விற்பனை நட்டம்	-	-	-	-	-	(226,680,000)	-	(2,023,409)	(228,703,409)
ஆண்டிற்கான மொத்த அகல்விரிவான செலவினம்	-	-	-	-	-	-	-	(676,625,510)	(676,625,510)
2011 டிசெம்பர் 31ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**974,706,008**	**1,781,563,583**	**(10,676,680,043)**	**(7,419,186,517)**

குறிப்பு 1:சபைத் தீர்மானத்திற்கமைய கொடுப்பனவற்ற நீண்ட கொடுபடவேண்டிய கடன் நிலுவைகள் 2010 ம் ஆண்டில் மீள் கட்டமைப்பு ஒதுக்குக்கு எதிரே திரும்ப எழுதப்பட்டுள்ளது. மீள எழுதப்பட்ட நிலுவைகள் வருமான இயல்பில் உள்ளதால்,நடைமுறை ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்களுக்கு எதிராக கழிப்பதன் மூலம் சீராக்கப்பட்டுள்ளது.

அடைப்புக்களில் உள்ள இலக்கங்கள் கழிப்பீடுகள் குறிக்கின்றன.

5 - 35 ஆம் பக்கம் வரையில் உள்ள நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகள் இதன் ஒருங்கிணைந்த பகுதியாகும்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
உரிமை பங்கு மாற்றங்களுக்கான கூற்று

(இலங்கை ரூபாவில் வெளியிடப்பட்டுள்ளது)

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரியது

கூ.மொ.வி.தா	பங்களிப்பு மூலதனம்	மூலதன ஒதுக்கு	பொது ஒதுக்கு	கடன் குறைப்பு ஒதுக்கு	வாகன பதிலீட்டு ஒதுக்கு	மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	மீள் கட்டமைப்பு ஒதுக்கு ஒதுக்கு	நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள்	மொத்தம்
2011 ஜனவரி 1ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**1,201,386,008**	**2,323,728,130**	**(10,195,851,709)**	**(6,170,251,088)**
முன்னைய ஆண்டு சரி செய்தல்	-	-	-	-	-	-	-	(31,861,731)	(31,861,731)
ஆண்டிற்கான மொத்த அகல்விரிவான செலவினம்	-	-	-	-	-		-	(313,605,785)	(314,269,784)
2011 டிசெம்பர் 31ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**1,201,386,008**	**2,323,728,130**	**(10,541,319,225)**	**(6,516,382,603)**
முன்னைய ஆண்டு சரி செய்தல்	-	-	-	-	-	-	-	3,093,775	3,093,775
ஏனைய சரி செய்தல் (குறிப்பு 1)	-	-	-	-	-	-	(542,164,547)	539,947,981	(2,216,566)
காணி.்.கட்டடங்கள் விற்பனை நட்டம்	-	-	-	-	-	(226,680,000)	-	(2,023,409)	(228,703,409)
ஆண்டிற்கான மொத்த அகல்விரிவான செலவினம்	-	-	-	-	-	-	-	(687,410,933)	(687,410,933)
2011 டிசெம்பர் 31ல் நிலுவை	**1,056,590**	**32,444,879**	**94,477,411**	**300,289,603**	**72,218,000**	**974,706,008**	**1,781,563,583**	**(10,687,711,810)**	**(7,430,955,736)**

குறிப்பு 1:சபைத் தீர்மானத்திற்கமைய கொடுப்பனவற்ற நீண்ட கொடுபடவேண்டிய கடன் நிலுவைகள் 2010 ம் ஆண்டில் மீள் கட்டமைப்பு ஒதுக்குக்கு எதிரே திரும்ப எழுதப்பட்டுள்ளது. மீள எழுதப்பட்ட நிலுவைகள் வருமான இயல்பில் உள்ளதால்,நடைமுறை ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்களுக்கு எதிராக கழிப்பதன் மூலம் சீராக்கப்பட்டுள்ளது.

அடைப்புக்களில் உள்ள இலக்கங்கள் கழிப்பீடுகள் குறிக்கின்றன.

5 - 35 ஆம் பக்கம் வரையில் உள்ள நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகள் இதன் ஒருங்கிணைந்த பகுதியாகும்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
காசுப்பாய்ச்சல் கூற்று

(இலங்கை ரூபாவில் வெளியிடப்பட்டுள்ள

டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்குரியது	குறிப்பு	குழமம் 2012	குழமம் 2011	கூ.மொ.வி.தா 2012	கூ.மொ.வி.தா 2011
இயங்கு செயற்பாடுகள் மூலம் காசுப்பாய்ச்சல்					
வரி விதிப்பிற்கு முன் இலாபம்/(நட்டம்)		(662,018,059)	(312,553,637)	(674,210,933)	(313,605,785)
சரி செய்தல்					
பெறுமானத் தேய்வு		39,814,737	28,500,311	39,759,876	28,469,376
புலப்படா சொத்துக்கள் தவணை கடன்கரைப்பு		39,738	36,321	39,738	36,321
குத்தகை காணி தவணைகடன்கரைப்பு		40,426	-	40,426	-
கோளாறுகளுக்காண ஏற்பாடுகள்		380,240,143	2,796,460	378,003,569	-
சொத்து,பொறித்தொகுதி,துணைக்கருவிகளின் விற்பனை இலாபம்		(5,892,489)	(3,071,400)	(5,892,489)	(3,071,400)
ஆண்டுக்காண பணிக்கொடை		4,247,629	4,437,033	4,247,629	4,437,033
வட்டி செலவினங்கள்		355,698,068	345,536,930	355,698,068	345,536,930
வட்டி வருமானங்கள்		(5,268,872)	(4,478,286)	(5,239,174)	(4,460,357)
செயல்படு மூலதன மாற்றத்திற்கு முன் இயங்கு இலாபம்		**106,901,321**	**61,203,732**	**92,446,712**	**57,342,118**
செயல்படு மூலதன மாற்றம்					
பொருட்பதிவேடுகள்		(147,343,278)	(27,344,782)	(147,343,278)	(27,344,782)
வியாபார மற்றும் ஏனைய பெறுகைகள்		(600,511,501)	(182,133,388)	(585,021,147)	(174,552,506)
ஏனைய நிதியில்லா சொத்துக்கள்		1,669,266	(3,720,099)	1,669,266	(3,720,099)
வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		850,534,310	6,006,276	834,634,560	4,989,389
ஏனைய நிதி அல்லா பொறுப்புக்கள்		8,625,390	64,057,617	4,152,047	61,876,043
இயக்கப்பாட்டின் ஊடாக உருவாக்கப்பட்ட காசு பயன்படுத்திய)		**219,875,508**	**(81,930,644)**	**200,538,159**	**(81,409,837)**
செலுத்தப்பட்ட வரிகள்		-	(8,325)	-	-
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(659,080)	(518,470)	(659,080)	(518,470)
செலுத்தப்பட்ட வட்டி		(6,638,471)	(724,262)	(6,638,471)	(724,262)
இயங்கு செயற்பாடுகள் ஊடாக தேறிய காசுப்பாய்ச்சல்		**212,577,958**	**(83,181,702)**	**193,240,609**	**(82,652,570)**
முதலீட்டு செயற்பாடுகள் ஊடாக காசுப்பாய்ச்சல்					
சொத்து,பொறித்தொகுதி,துணைக்கருவி கையேற்பு		(23,401,247)	(40,170,505)	(23,050,767)	(40,154,270)
புலப்படா சொத்துக்கள் கையேற்பு		(1,040,500)	(108,962)	(1,040,500)	(108,962)
சொத்து,பொறித்தொகுதி,துணைக்கருவி கையேற்பு விற்பனை இலாபங்கள்		7,844,089	11,972,000	7,844,089	11,972,000
கிடைத்த வட்டி		5,268,872	4,460,357	5,239,174	4,460,357
முதலிட்டு செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு		**(11,328,786)**	**(23,847,111)**	**(11,008,004)**	**(23,830,876)**
நிதியிடல் செயற்பாடுகள் ஊடாக காசுப்பாய்ச்சல்கள்					
கடன் வாங்கல்களை தீர்த்தல்		(37,700,000)	(26,100,000)	(37,700,000)	(26,100,000)
நிதிக்குத்தகை தீர்த்தல்		(15,777,175)	(4,755,059)	(15,777,175)	(4,755,059)
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்- கிடைத்த நிதி		-	242,500,000	-	242,500,000
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்- மீள் கொடுப்பனவு		(200,000,000)	-	(200,000,000)	-
நிதியிடல் செயற்பாடுகளில்/மூலம் காசுப் பாய்ச்சல்		**(253,477,175)**	**211,644,941**	**(253,477,175)**	**211,644,941**
ஆண்டில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை தேறிய மாற்றங்கள்		**(52,228,003)**	**104,616,129**	**(71,244,571)**	**105,161,496**
ஆண்டு தொடக்கத்தில் காசும் காசுக்கு நிகரானவையும்		165,356,988	60,740,859	165,033,455	59,871,959
ஆண்டிறுதியில் காசும் காசுக்கு நிகரானவையும்	**21**	**113,128,984**	**165,356,988**	**93,788,884**	**165,033,455**

அடைப்புக்களில் உள்ள இலக்கங்கள் கழிப்பீடுகள் குறிக்கின்றன.

5 - 35 ஆம் பக்கம் வரையில் உள்ள நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகள் இதன் ஒருங்கிணைந்த பகுதியாகும்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
2012 டிசெம்பர் 31ல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதி கூற்றுக்களுக்கான குறிப்பு

1. கூட்டுரு தகவல் அறிக்கை

1.1. அறிக்கையிடும் நிறுவனம்

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது 1949 ஆம் ஆண்டின் 47 ம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபன சட்டடத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரு அரச அமைப்பாகும். கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் தொழிற்பாடுகளின் முக்கிய இடமும் இல 27 வொக்ஷோல் வீதி, கொழும்பு 02ல் எனும் முகவரியில் அமைந்துள்ளது.

2012 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஒன்று திரட்டப்பட்ட நிதிகூற்றுக்கள் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் (குழுமம் என குறிப்பிடப்பட்ட) நிதியியல் தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது 217 நிரந்தர பதவியணியினரையும் 27 அமைய ஊழியர்களையும் கொண்டுள்ள அதே வேளை குழுமம் ……. நிதியாண்டின் இறுதியில் கொண்டிருந்தது.

1.2. பிரதான செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் இயல்பும்

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பிரதான செயற்பாடானது இலங்கை வாழ் நுகர்வோருக்கு அத்தியாவசிய உணவுபொருட்களுக்கான மொத்த மற்றும் சில்லறை விலை வசதிகளை அளிப்பது, லங்கா சதொச நிறுவனத்திற்கு ஆலை மற்றும் போக்குவரத்து வசதிகள் அளிப்பதாகும்.

துணை நிறுவனங்களின் பிரதான செயற்பாடுகளானவை பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், பொறியியல் மற்றும் சேவைகள் முகாமை செய்தல்.

மீளாய்வுக்கு உட்பட்ட நிதியாண்டின்

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தினதும் குழுமத்தினதும் பிரதான செயற்பாடுகளில் இயல்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படவில்லை.

1.3. அறிக்கையிடல் திகதி

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிதியியல் அறிக்கையிடல் டிசெம்பர் 31 உடன் முடிவடையும் அதே வேளை துணை நிறுவனங்களின் நிதி அறிக்கையிடல் காலம் மார்ச் 31 உடன் முடிவடைகின்றது. கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் அறிக்கையிடல் கால முடிவுக்கும் துணை நிறுவனங்களின் அறிக்கையிடல் கால முடிவுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறுமாயின் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் சரி செய்தலை மேற்கொள்ளும்.

1.4. வெளியீட்டிற்கான அதிகாரபூர்வ திகதி

ஒன்று திரட்டப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 ஆண்டு ….. ஆம் திகதி பணிப்பாளர் சபையால் வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்படுகின்றன.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் சாராம்சம்

2.1. தயாரிப்பு அடிப்படை

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஒன்று திரட்டிய நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒன்று திரட்டிய நிதிக்கூற்றுகளானவை உடைமைகள், பொறித்தொகுதிகள் மற்றும் உப கருவிகள் மீள் மதிப்பீட்டின் ஊடாக திருத்தியமைக்கப்பட்டு வரலாற்று செலவு மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவான ஒன்று திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட சில இடரார்ந்த கணக்கீட்டு மதிப்பீடுகளின் பயன்பாடுகள் தேவைப்படுகின்றன. அத்துடன் கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்க முகாமைத்துவத்தின் தீர்மானமும் தேவைபடுகிறது.

2.2. கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் நிதிக்கூற்றுகளில் தரப்பட்ட கால எல்லைக்குத் தேவையான பிரயோகத்தை தொடர்ச்சியாக கோரிநிற்கின்றன.

முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு மற்றும் வகைப்படுத்தல் தேவைப்படுமிடத்து சிறந்த முன்வைப்பு மற்றும் ஒப்பீட்டு நடைமுறை ஆண்டுடன் ஒப்பீட்டுக்கு செய்யப்படுகின்றது. வகைப்படுத்தலில் தாக்கம் 34 ஆம் குறிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

2.3. துணை நிறுவனங்கள் ஒன்று சேர்ந்துசேர்த்தல்

துணை நிறுவனங்களானவை பொதுவாக ஒன்றில் அரைப்பகுதிக்கு மேலான வாக்குரிமை கொண்ட பங்குதாரருடன் இணைந்த நிதியியல் மற்றும் செயற்பாட்டு கொள்கையை நிருவகிப்பதற்கும் அதிகாரத்தை குழுமம் கொண்டிருக்கும் ஒரு நிறுவனம் ஆகும். துணை நிறுவனங்கள் குழுமத்திற்கு அதிகாரம் மாற்றப்பட்ட திகதியில் இருந்து முழுமையாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. அதிகாரம் ரத்து செய்யப்படும் திகதியில் பிரிக்கப்படும்.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிகூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

வியாபார கூட்டிணைப்புக்களின் கணக்குகாக குழுமமானது சுவீகரிப்பு முறைமையைப் பயன்படுத்துகின்றது. துணை நிறுவனங்களுக்கான மாற்றலை கவனித்தில் எடுக்கும்போது மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்களின மெய்ப்பெறுமதி குழுமத்தில் வழங்கப்படும் உரிமைப் பங்கு பட்டியலுக்கான பொறுப்புகளை கொண்டது. குழுமமானது கையேற்பில் உள்ள கட்டுபடுத்த முடியாத வட்டி வீதத்தை இங்கீகரிக்கும் அதே வேளை இது கட்டுப்படுத்த முடியாத வட்டியின் கையேற்பில் அடையாளம் காணக்கூடிய தேறிய சொத்துக்கள் அங்கீகரிக்கப்பட்ட பாகத்தில் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

துணைநிறுவனங்களில் ஏற்பட்ட நட்டங்கள் அவை பற்றாக்குறை நிலுவையை எற்படுத்தினாலும் கட்டுப்படுத்த முடியாத வட்டியில் சேர்க்கப்படும்.

நிறுவனங்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல், நிலுவைகள் குழும அங்கத்துவ அமைப்புகளுக்கு இடையில் கொடுக்கல் வாங்களில் ஏற்படும் வருமானம் மற்றும் செலவுகள் நீக்கப்படும். சொத்துக்களில் அங்கீகரிக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படக்கூடிய இலாபங்களும் நட்டங்களும் கூட நீக்கப்படும். துணை நிறுவனங்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள், குழுமத்தால் உருவாக்கப்பட்ட கொள்கைகளின் உள்ளடக்கத்தை உறுதிபடுத்தத் தேவைப்படும் போது மாற்றப்படும்.

குழுமானது நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொண்ட வட்டி மீதுள்ள அதிகாரத்தை ரத்து செய்யும் போது அதிகாரம் இழக்கப்பட்ட திகதியில் அதனது மெய்ப்பெறுமதி மீள அளவிடப்படும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட இலாபம் நட்டத்திலுள்ள தொகைகள் மாற்றத்துடன் இது மேற்கொள்ளப்படும். அத்துடன் குறித்த நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அவதானிக்ககூடிய வருமானத்தின் தொகைகள் கணக்கில் சேர்க்கப்படும். எனினும் இது மேற்கொள்ளப்படுவது குழுமமானது குறித்த சொத்துக்களை நேரடியாக நீக்கும் அல்லது பொறுப்புக்கள் இலாபம் நட்டங்களுக்கு இணங்க மீள வகைப்படுத்தபபடும்போது ஆகும்.

2.4. வெளிநாட்டு நாணய மாற்றம்

2.4.1 தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

நிதிக்கூற்றில் உள்ளடக்கப்ப்டுள்ள கொடுக்கல் வாங்கல்களும் நிலுவைகளும் நிறுவனங்கள் இயங்கும் ஆரம்ப பொருளாதார சூழலின் நாணயத்தைக் கொண்டு அளவிடப்படுகின்றன. நிதிக்கூற்றுக்கள் குழுமத்தின் முன்வைப்பு நாணயமான இலங்கை ரூபாக்களில் (LKR) சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.4.2 கொடுக்கல்வாங்கல்களும் நிலுவைகளும்

வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளில் காணப்பட்ட மாற்றுவீதங்களைக் கொண்டு தொழிற்பாட்டு நாணயமாக மாற்றப்படுகின்றன். அத்தகைய பரிமாற்றல்கள் தீர்க்கப்படும் போது நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஆண்டிறுதி பரிமாற்ற வீதங்களின் மாற்றல்களின் போதும் கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நாணயமாற்று பெறுகைகளும் இழப்புக்களும் மற்றும்

வெள்நாட்டு நாணய வடிவில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் அகல் விரிவான வருமான கூற்றில் சேர்த்துப் கொள்ளப்படுகின்றன.

கிரமமாகக் குறைக்கப்பட்ட செலவிலுள்ள மாற்றங்கள் தொடர்பான பரிமாற்று வித்தியாசங்கள் அகல் விரிவான வருமானக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2.5. <u>சொத்து, பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்</u>

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் செலவில் சேர்க்கப்படும். இதில் சொத்துக்களை முகாமைத்துவம் கருதும் தொழிற்பாட்டு முறையின் இயலளவிற்கு தேவையானவாறு ஸ்தானத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதில் நேரடியாக பங்களிப்பு செய்யும் எந்தவொரு செலவும் உள்ளடங்கும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சேர்ந்த பெறுமானத்தேய்வு மற்றும் ஏதாவது சேர்ந்த கோளாறுகளுக்கான இழப்புக்கள் ஆகியவற்றின் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள்மதிப்பிடப்பட்ட பின் கையேற்கப்பட்ட சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கழிக்கப்பட்ட சேர்ந்த பெறுமானத்தேய்வு மற்றும் கோளாறுகளுக்கான இழப்புக்கள் தவிர்ந்த வரலாற்றுச் செலவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர்ந்து வரும் செலவுகள், சொத்துக்களின் காவுகைத் தொகையில் அல்லது சொத்தாக சேர்க்கப்பட்டதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் இது எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் மட்டுமே சாத்தியமாவதுடன் அதன்படி செலவு அளவிடப்படும். ஏனைய எல்லா திருத்தங்களும் பராமரிப்புகளும் அவை நிகழ்த்த நிதியாண்டின் அகல் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டள்ளது.

காணி பெறுமானத்தேய்வடைவதில்லை. ஏனைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன் ஆயுட்காலத்திற்கு செலவை ஒதுக்கும் பொருட்டு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பின்வருமாறு கணிப்பிடப்படுகிறது.

சொத்துக்களின் வகுதி	ஆண்டுகள்
கட்டடம்	20 ஆண்டு
கட்டட பாகங்கள்	10 ஆண்டு
பொறியும் பொறித்தொகுதியும்	10 ஆண்டு
மோட்டார் வாகனங்கள்	05 ஆண்டு
தளபாடங்களும் உபகரணங்களும்	03 ஆண்டு
அலுவலக உபகரணங்கள்	10 ஆண்டு
கணணி மற்றும் துணை பாகங்கள்	03 ஆண்டு
பண்டகசாலை உபகரணங்கள்	10 ஆண்டு
ஏனைய உபகரணங்கள்	10 ஆண்டு
கருவிகள்	10 ஆண்டு

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2012 ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

ஒரு சொத்தின் காவுகைத் தொகையானது அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால் காவுகைத் தொகைக்கு நேராக எழுதப்படுகிறது.

2.6. புலப்படா சொத்துக்கள்

கையேற்கப்பட்ட கணினி மென்பொருள்கள் கையேற்க நிகழ்ந்த செலவின் அடிப்படையிலும் குறிப்பிடப்பட்ட மென்பொருள்கள் மற்றும் முறைமைகளின் பயன்பாடு ஆகியவற்றைக்கொண்டு மூலதனமாகக் கணிக்கப்படுகின்றது. கையேற்கப்பட்ட புலப்படா சொத்துக்கள் செலவற்ற திரண்ட தள்ளுபடிகள் மற்றும் திரண்ட பழுதடைந்த கோளாறுகளுக்கான இழப்புக்களில் குறிப்பிடபடுகிறது. இச் செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன் ஆயுட்காலத்திற்கு அமைய கீழ் வருமாறு கணிப்பிடப்படுகிறது.

கணினி	மென்பொருள்	10 ஆண்டுகள்

கணின மென்பொருள் பராமரிப்புடன் இணைந்த செலவுகள், ஆகு செலவாக சேர்க்கப்பட்டுள்ளன.

2.7. குத்தகைக் காணிகள்

குத்தகையின் கீழுள்ள காணிகள் முன்செலுத்தப்பட்ட குத்தகை வாடகையாக ஆரம்பத்தில் அளவிடப்படுகிறது. அத்துடன் ஏதாவது ஆரம்ப நேரடி செலவுகள் தொடக்கத்திலும் படிபடியாகவும் ஏற்பட்டிருப்பின் குத்தகை காணி திரண்ட மற்றும் கோளாறுகளுக்கான செலவுகளில் அளவிடப்படுகிறது. குத்தகைக் காணியின் பெறுமதி குத்தகை காலத்தின் மேல் தவணைமுறையில் மதிப்பிடப்படும்.

குத்தகைக் காணி	50 வருடங்கள்

2.8. நிதிஅல்லா சொத்துக்களின் கோளாறு

ஒவ்வொரு அறிக்கையுடன் காலத்தின் இறுதியிலும் குழுமானது அதனது சொத்துக்களின் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் புலப்படாச் சொத்துக்கள் மற்றும் துணை நிறுவனங்களின் முதலீடுகள் ஆகியவற்றில் பெறுமானத் தேய்வுகள் உள்ளனவா என்பதை தீர்மானிக்க மீளாய்வு மேற்கொள்கின்றது. இவ்வாறு தென்படுமானால் சொத்தின் மீள அறவிடக்கூடிய தொகை தேய்வு நட்டத்தின் அளவை தீர்மானிக்க மதிப்பீடு செய்யப்படுகிறது. ஒரு தனியான சொத்தின் மீள அறவிடக்கூடிய தொகையை மதிப்பிட முடியாத சந்தர்ப்பங்களில் குழுமானது காசு உற்பத்தியாக்கி பிரிவுகளை (CGUs) த் தீர்மானித்து சொத்து உரித்தாகும். காசு உற்பத்தியாக்கி பிரிவின் (CGUs) மீள அறவிடபடக்கூடிய தொகையை

மதிப்பீடு செய்கிறது. மீள அறவிடக்கூடிய தொகை விற்பனை செய்யக்கூடிய உண்மைப் பெறுமதியற்ற செலவுகளினதும் பாவனையிலுள்ள பெறுமதியினதும் அதிகரிப்பு ஆகும். பாவணையிலுள்ள மதீப்பீடு செய்யும்

போது மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள், வரிவிதிப்பிற்கு முன்னரான கழிவுவீதத்தைக் கொண்டு அவற்றின் தற்சமைய பெறுமதிக்கு கழிப்பீடு செய்யப்படுகிறது. இது பணத்தின் காலபெறுமதியின் தற்சமய சந்தை மதீப்பீடுகளையும் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் சீராக்கல் செய்யப்படாத சொத்துகளின் இடரார்ந்த நிலையை பிரதிபலிக்கும்.

சொத்து ஒன்றின் மீள அறவிடக்கூடிய தொகை அதன் காவுகைக் தொகைக்கு குறைவாக மதீப்பீடு செய்யப்பட்ட சொத்தின் காவுகைத் தொகை அதன் மீள அறவிடக்கூடிய தொகைக்கு குறைக்கப்படும். தேய்வு நட்டமானது பரந்த அகல் விரிவான வருமானக் கூற்றில் நேரடியாக அங்கீகரிக்கபடும்.

2.9. நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்கும் கருவியை ஒப்பந்த ஏற்பாடுகளில் ஒரு தரப்பாக அமையும் போது அங்கீகரிக்கப்படும். நிதிச் சொத்துக்களும் நிதிப்பொறுப்புக்களும் முதலில் கொடுக்கல் வாங்கல்கள் விலையிலேயே அளவிடப்படும்.

(இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக மெய்ப் பெறுமதியில் அளவிடப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆரம்ப அளவீடு தவிர்ந்த கொடுக்கல் வாங்கல் விலைகள் உட்பட)

நிதிச் சொத்துக்களின் சாசுப்பாய்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் இரத்தாகும்போது அல்லது தீர்க்கப்படும்போது குழுமானது நிதிச்சொத்துக்களின் உரிமைத்தன்மையின் அனைத்து இடர்கள் மற்றும் சாதகங்களை பெறுமானமுடையதாக மற்றொரு தரப்பிற்கு மாற்றும்போது நிதிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படும். குமுமானது நிதிச்சொத்து ஒன்றை ஒப்பந்தத்தில் குறிபிட்டப்பட்ட கடமைப்பாடுகள் அளிக்கப்படும்போது, ரத்து செய்யப்படும்போது அல்லது காலாவதியாகும் போது அங்கீகரிக்கப்படும். ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தினதும் இறுதியில் நிதிக்கருவிகள் சாதகமான வட்டி முறையைக் கொண்டு கிரமமாக குறைக்கப்பட்ட விலையில் அளவிடப்படும்.

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் குழுமம் விலையில் அல்லது கிரமமாகக் குறைக்கப்பட்ட விலையில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகான ஸ்தூலமான சாட்சிகள் உள்ளனவா என மதிப்பீடு செய்யும். பெறுமானத் தேய்வுக்கான ஸ்தூலமான சாட்சி இருப்பின் தேய்வு நட்டம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் நேடியாக இனங்காணப்படும்.

2.10. பொருட்பதிவேடுகள்

பொருட்பதிவேடுகள் செலவின் அடிமட்டத்திலும் தேறிய உணரக்கூடிய பெறுமதியலும் குறிப்பிடப்படுகின்றன. செலவு, எடை காணப்பட்ட சராசரி முறையாக தீர்மானிக்கப்படுகிறது.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்

2.11. வியாபார வருவாய்கள்

வியாபாரத்தின் வழமையான நடவடிக்கைகள் மூலம் பொருட்களின் விற்பனைக்காக நுகர்வோரிடம் இருந்து கிடைக்கவேண்டிய தொகைகள் வியாபார பெறுகைகள் ஆகும். சேகரிப்புகள் (ஒரு வருடத்திற்குள் அல்லது அதற்கு குறைவான) வியாபாரத்தின் வழமையான நடவடிக்கைச் சுழற்சியில் இருந்து எதிர்பார்க்கப்படும் அதே வேளை, பெறுகைகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. வியாபார பெறுகைகள் மெய்ப்பெறுமதியாக ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் (விலைச்சீட்டு பெறுமதி) தேயவுக்கான வழங்கல் தவிர்ந்த உண்மையான விலைச்சீட்டு பெறுமதியாக பின்னர் அளவிடப்படுகின்றன.

குழுமம் வியாபாரப் பெறுகைகள் தேய்வடைந்தமைக்கான சாட்சியங்கள் உள்ளனவா என அறிய ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியிலும் மதிப்பீடு செய்கின்றது. வியாபாரப் பெறுகைகளின் தேய்வுக்கான சாத்தியமான சான்றுகளில் கொடுப்பனவுகளின் சேகரிப்புகள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கை ஆகியவற்றில் குழுமத்தின் கடந்தகால அனுபவங்களை உள்ளடக்குகின்றது. வியாபார பெறுகைகள் தேய்வடைவதுடன் தேய்வு நட்டங்கள், தேய்வுக்கான சாத்தியமான சான்றுகள் இருப்பின் மட்டும் உள்ளடக்கப்படுகின்றது. வியாபார பெறுகைகள் தேய்வுக்காக தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

2.12. காசு மற்றும் காசுக்கு நிகரானவை

காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு நிகரானவை கையிருப்பில் உள்ள காசில் உள்ளடக்கப்படுகின்றது. வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள கால வைப்புகள் மூன்று மாத முதிர்ச்சியைக் கொண்ட ஏனைய குறுங்கால உயர் திரவத் தன்மையுமைய முதலீடுகள் அல்லது வங்கி மேலதிகப்பற்று.

2.13. பங்களிப்பு மூலதனம்

பங்களிப்பு மூலதனம் திரட்டிய நிதியில் இருந்து செலுத்தப்பட்ட ஆரம்ப மூலதனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

2.14. வியாபார கொடுப்பனவுகள்

வியாபார கொடுப்பனவுகள் வழங்குநர்களிடம் இருந்து வழமையாக நடைமுறை வியபாரத்தில் இருந்து கைக்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகள் ஆகும். வியாபார கொடுப்பனவுகள் வியாபாரத்தின் (ஒரு வருடத்திற்கு அல்லது அதற்கு குறைவான) வழமையான இயக்க சுழற்சியில் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டி இருப்பின் நடைமுறைப்பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும். அல்லாவிடின் அவை நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும்.

வியாபார கொடுப்பனவுகள் முதலில் மெய்ப்பெறுமதியில் (கொடுக்கல் வாங்கல் விலை) அங்கீகரிக்கப்பட்டு பின்னர் கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படும்.

2.15. அரச கொடைகள்

நாணயமல்லா கொடைகள் உட்பட அரச கொடைகள் அவற்றின் உண்மைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படும். இங்கு கொடைகள் கிடைக்கப்பெறும் எனும் நியாயபூர்வ உறுதிப்பாடு மற்றும் குழுமம் வழங்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுபட்டிருக்கும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான அரச கொடைகள் நடைமுறை அல்லா பொறுப்புக்களின் உள்ளடக்கப்படும் அதே சமயம் உரிய சொத்துக்களின் ஆயுள் எதிர்பார்ப்பில் நேர்கோட்டு அடிப்படையில் அகல் விரிவான வருமானக்கூற்றில் இனங்காணப்படும்.

நாணயமல்லா கொடைகள் நாணயமல்லா சொத்துக்களின் காவுகைப் பெறுமதியில் அளவிடப்படும் அதேவேளை காவுகை பெறுமதியில் கொடையும் சொத்துக்களும் கணக்கில் வைக்கப்படும்.

2.16. கடன் வாங்கல்கள்

குழுமத்தின் கடன்கள் கால எல்லைகளையும் கடன்களையும் உள்ளடக்கும். கடன்கள் முதலில் மெய்ப்பெறுமதியில் அதாவது நிகழ்ந்த தேறிய கொடுக்கல் வாங்கல் செலவில் அங்கீகரிக்கப்படும். கடன்கள் தொடர்ந்து சாத்தியமான வட்டிமுறையைக் கொண்டு படிப்படியாக குறைக்கப்பட்ட செலவில் பேணப்படும். தளம்பல் வீத கடன்கள் ஒவ்வொரு தொடர்ந்து வரும் காலத்தினதும் குறித்த காலத்தில் காணப்பட்ட தளம்பல் வட்டிவீதத்தை (செல்லுபடியான வட்டி வீதம்) கொண்டு படிபடியாக குறைக்கப்பட்ட செலவில் அளவிடப்படும். சட்டத்துறை மற்றும் ஆவணப்படுத்தல் கட்டணங்கள் கடன்களின் கொடுக்கல் வாங்கல் செலவில் அங்கீகரிக்கப்படும்.

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியிலும் படிப்படியாக குறைக்கப்பட்ட செலவில் கடன்களின் காவுகைப் பெறுமதியில் தோன்றிய வெளிநாட்டு பெறுகைகளும் இழப்புகளும் அகல் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.17. திறைசேரிக்கான கொடுப்பனவுகள்

திறைசேரிக்கான கொடுப்பனவுகள் CWE நிறுவனத்தின் பேரில் திறைசேரியால் வழங்கப்பட்ட பிணை முறிகளைக் கொண்டுள்ள அதே வேளை இது ஆறு வர்த்தக வங்கிக் கடன்களின் தீர்த்தல் மற்றும் உரிய வங்கிகளுக்கு பிணைமுறிவடிவில் வழங்கப்படும் வட்டி ஆகியவற்றையும் திறைசேரி மீள செலுத்துவது மேற்கொள்கின்றது. CWE நிறுவனத்தின் பேரில் திறைசேரியால் மேற்கொள்ளப்படும் மொத்த பொறுப்புக்கள் திறைசேரிக்கு செலுத்தவேண்டிய தற்சமய கடப்பாட்டின் காவுகை பெறுமதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்

2.18. கடன்வாங்கல் செலவுகள்

கடன்வாங்கல் செலவுகள் அவை நிகழ்ந்த காலப்பகுதியின் அகல் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.19. குத்தகைகள்

குழுமம் சில சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களைக் குத்தகைக்கு விடுகின்றது. குழுமமானது உரிமைத்தன்மையின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமானங்கள், மெய்ரீதியான கொண்டுள்ள சொத்துக்கள், பொறித்தொகுதியில் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் குத்தகை நிதிக்குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. நிதிக் குத்தகைகள் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்தின் ஏற்கக்கூடிய பெறுமதிக்கு கீழாகவும் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவின் தற்சமய பெறுமதியிலும் மூலதனமாக்கப்படுகின்றது.

ஒவ்வொரு குத்தகை கொடுப்பனவும் பொறுப்பிற்கும் நிதிக்கட்டணங்களுக்கும் இடையே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேறிய நிதிக்கட்டணங்களில் தொடர்பு வாடகை கடப்பாடுகள் ஏனைய நீண்டகால கொடுப்பனவுகளுக்கு உள்ளடக்கப்படுகிறது. நிதிச் செலவின் வட்டி மூலக்கூறு குத்தகைக் காலம் மீதான வருமானக் கூற்றுடன் தொடர்புடையது. இதன் மூலம் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரிய பொறுப்புக்களின் எஞ்சியுள்ள நிலுவையின் தொடர்ச்சியான கால வட்டிவீதம் ஒன்றை வழங்கலாம். நிதிக்குத்தகையின் கீழ் கைக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் சொத்து மற்றும் குத்தகை காலத்தின் பயனுள்ள ஆயட்காலத்தின் கழிப்பின் மேல் பெறுமதியிறக்கம் செய்யப்படுகின்றது.

குத்தகைகாரரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள உரிமைத்தன்மையின் இடர்கள் மற்றும் வெகுமானங்களின் கணிசமான பகுதி இயங்கு குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இயங்கு குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இயங்கு குத்தகைகளின் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் (குத்தகைதாரர் மூலம் கிடைக்கப்பெற்ற தேறிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் குத்தகை காலத்தின் மீதான நேர்கோட்டு அடிப்படையிலான வருமான கூற்றில் அளவிடப்படுகிறது.

2.20. நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலத்திற்குரிய வரிச்செலவு நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியைக் கொண்டுள்ளது. வரியானது அகல் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ஏனைய வருமானத்தில் இனங்காணப்பட்ட பிரிவுகளுடன் தொடர்புடைய பரப்பு தவிர்ந்ததாகும். இவ் விடயத்தில் வரி, ஏனைய அகல் விரிவான வருமானத்திலும் அங்கீகரிக்கப்படுகின்ற நடைமுறை வருமான வரி கட்டணம் வரிச்சட்டங்கள் அடிப்படையிலும் கணிக்கப்படுகின்றது. இவ் வரிச்சட்டம் குழுமத்தின் இயங்கும் மற்றும் வரி வருமானத்தை உற்பத்தி செய்யும் காலத்தின் இறுதிக்குப் பொருத்தமாக்கப்பட்டதாகவும் அமுல்படுத்தப்படுவதாகவும் வரி நிறுவனங்களுக்கு முகாமைத்துவமானது செலுத்த உத்தேசக்கும் தொகையின் அடிப்படையில் மிகப் பொருத்தமான போது ஏற்பாடுகள் தாபிக்கின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படையிலும் நிதிக்கூற்றுகளில் அவற்றின் காவுகைதொகைக்கும் இடையில் தோன்றும் தற்காலிக வித்தியாசங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரி, கொடுக்கல் வாங்கல் ஒன்றின் போது சொத்து அல்லது பொறுப்பு ஒன்றில் ஆரம்ப இனங்காணலின் போது தோன்றினால் கணக்கு வைக்கப்படமாட்டாது. இது கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டையும் வரிவிதிக்ககூடிய இலாபம் அல்லது நட்டத்தையும் பாதிக்காத சந்தரப்பத்தில் அமைந்த வியாபார கூட்டினைப்பின் போது ஆகும். பிற்போடப்பட்ட வரி அறிக்கையிடல் காலத்தின் இறுதி திகதியில் அமுல்படுத்தப்பட்ட வரி வீதங்கள் கொண்டு தீர்மானிக்கப்படும் அதே வேளை இவ் வரி வீதங்கள் உரிய பிற்போடப்பட்ட வரிச்சொத்து அங்கீகரிக்கப்படும் போதோ அல்லது பிற்போடப்பட்ட வருமான வரி பொறுப்பு தீர்க்கப்படும் போதோ பிரயோகிக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் தற்காலிக வித்தியாசங்கள் பயன்படுத்த முடிகின்றவாறு எதிர்கால வரிவிதிப்பு இலாபங்கள் நிகழக்கூடிய சாத்தியம் இருக்கும் பட்சத்திலோ அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கும் பொறுப்புக்களும் நடைமுறை வரிப்பொறுப்புகளுக்கு எதிராக நடைமுறைச் வரிச்சொத்துக்களை அதே வரிவிதிப்பு நிறுவனங்களால் விதிக்கப்பட்ட வருமான வரியுடன் தொடர்புடைய

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றையும் நிரப்பு செய்யக்கூடிய சட்டரீதியான உரிமை காணப்படும் போது குறைநிரப்பு செய்யப்படும்.

2.21. ஊழியர் நலன்கள்

குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் மற்றும் பங்களிப்பு திட்டங்களை கொண்டுள்ளது.

(அ) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது குழுமம் ஒரு தனியான உறுப்பிற்கு நிலையான பங்களிப்புகளை வழங்குவதன் அடிப்படையாக ஒரு பின் ஊழியர் நலன் திட்டமாகும். குழுமத்திற்கு மேலும் பங்களிப்புகளைச் செலுத்துவதற்காக சட்டரீதியான அல்லது கட்டமைக்கப்பட்ட கடப்பாடுகள் கிடையாது. பங்களிப்புக்கள் அவை செலுத்தவேண்டிய காலத்தில் ஊழியர் பயன் செலவினமாக அங்கீகரிக்கப்படும்.

குழுமம், ஊழியரின் மொத்த ஊதியங்களின் 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தும் அதே வேளை ஊழியரின் மொத்த ஊதியங்களின் 3% ஐ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்துகின்றது.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட பயன் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட பயன் திட்டம் ஊழியர் ஒருவரது சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை மூலம் அவர் இறுதியாக பெற்ற மாத சம்பளத்தின் ½ பகுதியை பெருக்கி வரும் தொகைக்கு சமனான கொடுப்பனவை அவர் ஓய்வு பெறுகையில் பெற்றுக்கொள்வதற்கு வழி வகுக்கின்றது. நிர்ணயிக்கப்பட்ட பயன் கடப்பாடு பூர்த்திசெய்யப்பட்ட சேவை ஆண்டுகளின் எண்ணிக்கை மூலம் இறுதியாக பெற்றுக்கொண்ட மாதச் சமபளத்தின் ½ பகுதியை பெருக்குவதன் ஊடாக வருடாந்தம் அளவிடப்படுகிறது.

ஓய்வு பயன் கடப்பாட்டிற்கு வெளியில் இருந்து நிதியளிக்கப்படுவதில்லை.

(இ) குறுங்கால ஊழியர் நலன்

குறுங்கால ஊழியர் பயன் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட உரிய சேவையின் பொருட்டு செலுத்த உத்தேசிக்கப்படும் கழிவு செய்யப்படா தொகையாக அளவிடப்படுகிறது.

2.22. ஏற்பாடுகளும் நேர்வுக் கடப்பாடுகளும்

வருமானக் கூற்றில் குத்தகை வருமானமாக ரூபா 186,576,358 தொகை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் உழைக்கப்படுவதற்கு உரிய கட்டிடங்கள், நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு முறைமையில் நிலவிய பின்வரும் நலிவுகள் காரணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட

தரவுகளினதும் தகவல்களினதும் சரியான நிலையை உறுதி செய்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

i. தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நிதியாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியடைவதுடன் அதன் உப கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நிதியாண்டு மார்ச் 31 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்தது. 2012 திசெம்பர் 31 ஆம் திகதி ஒன்றிணைந்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் தாபனத்தின் உப கம்பனிகளில் 2013 மார்ச் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு தனியார் கணக்காய்வாளர்களால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புகள் நிதியாண்டின் காலப்பகுதி தொடர்பான கவனம் எடுக்கப்படாது ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

ii. கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் பற்றுச்சீட்டுக்களும் முறைப்படி காசேடுகளில் பதிவு செய்யப்பட்டிராத காரணத்தால் கணக்கீடு செய்யப்பட்டிராத பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் இன்மை குறித்து கணக்காய்வில் மறுக்கமுடியாதிருந்தது.

iii. மீளாய்வாண்டின் போது பரீட்சை மீதியைப் பரீட்சிக்கையில் 168 சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 27,584,061,602 தொகையான வரவு மீதியும் 110 பொறுப்புகள் மற்றும் வருமானக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 30,129,471,178 செலவு மீதியும் நிதிக்கூற்றுக்களுடன் இணைந்திருக்கவில்லை. இந் நிலை நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படுகையில் தாக்கத்தை விளைவிக்கும்.

(ஆ) வியாபாரப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2006 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 275,000,000 தொகையான கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனை மீளச் செலுத்த

வேண்டிய கடனாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திரண்ட கணக்காய்வுக் கட்டணத் தொகையான ரூபா 10,174.170 தொகைக்காக ரூபா 1,871,000 தொகை மாத்திரம் செலுத்த வேண்டிய மீதியாக ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி, ரூபா 8,303,170 தொகையான நடைமுறைப் பொறுப்புகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்டிருந்தன.

(ஈ) வாகன விற்பனை இலாபம் ரூபா 5,101,356 தொகையான போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,892,489 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் வாகன விற்பனை இலாபம் ரூபா 791,133 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) தாபனத்தால் அரசாங்க வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறுங்காலக் கடன் தொகை தொடர்பாக 2014 ஒக்டோபர் 13 ஆம் திகதி, அரசாங்க வங்கி முகாமையாளரின் கடிதத்தின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 29,504,364 தொகையான செலுத்த வேண்டிய தண்டப்பணம் தொடர்பாகக் கண்டறியப்பட்டதுடன் கடனிற்காகச் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டித் தொகை ரூபா 151,697,824 ஆகவும் வருடத்திற்கு உரித்தான வட்டித் தொகை ரூபா 27,166,711 ஆகவும் காணப்பட்டது. இச் செலவினம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படுவதற்கோ அல்லது சீராக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பொதியிடற்பிரிவிற்கு கிடைக்கப்பெற்றிருந்த மொத்த வெள்ளைச் சீனியின் அளவு 883,951 கி.கி. ஆனதுடன் அன்றைய தினம் வரை பொதியிடப்பட்டிருந்த அளவு 713,832 கி.கி. ஆகும். இதன் படி, 170,119 கி.கி. அளவான வேறுபாட்டிற்கான காரணம் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 பெப்ரவரி 21 ஆம் திகதி தலைவரின் கூற்றின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பொதியிடப்பட்ட மொத்த சீனிப்

பொதியின் அளவு 717,788 ஆனதுடன் வரிசைப் படி சமர்ப்பிக்கப்பட்ட பொதிகளின் அளவு 694,274 ஆனமையால் 23,514 பொதிகளின் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பொதியிடப்பட்ட சீனி அளவிற்காக பெறவேண்டிய கட்டணம் ரூபா 882,879 (717,788 பொதிகள் x ரூபா 1.23) ஆக வேண்டிய போதிலும் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் படி, இது ரூபா 864,429 ஆகக் காணப்பட்டது.

(ஈ) தாபனத்தின் நெற் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,587,080,892 தொகையான மீதி நிலவுவதாக நெற் சந்தைப்படுத்தல் சபையின் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 962,585,013 செலுத்தப்பட வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனத்தால் அரச வங்கி ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த குறுங்காலக் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 207,050,943 ஆகிய போதிலும் வங்கியால் அனுப்பிவைக்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் படி, அக் கடன் மீதி ரூபா 207,097,942 ஆகக் காணப்பட்டது. இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாதிருந்தது.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 2,010,153,232 கூட்டுத்தொகையான 10 சொத்துக் கணக்கு மீதிகள், ரூபா 8,971,636,580 கூட்டுத்தொகையான 5 பொறுப்புக் கணக்கு மீதிகள், ரூபா 54,843,226 தொகையான 5 வருமானக் கணக்கு மீதிகள், ரூபா 1,781,563,583 தொகையான திரண்ட, ரூபா 240,761,731 தொகையான நிலையான சொத்துக்கள் கைதவிர்க்கப்படுவது தொடர்பான ஆவணங்கள், உரித்துறுதிகள், நிலையான சொத்துப் பதிவேடுகள்,

குத்தகை உடன்படிக்கைகள், முதலீட்டுச் சான்றிதழ்கள் மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் ஆகிய சான்று.

(ஆ) கூட்டாக ஏனைய கம்பனிகளுக்கு உரித்தான உடன்படிக்கைகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 106,955,071 தொகையான வருமானம், ரூபா 414,802 தொகையான நடைமுறையல்லாத சொத்துக்கள், ரூபா 41,262,131 தொகையான நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 11,031,768 தொகையான உரிமைகள், ரூபா 30,645,165 தொகையான நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 86,931,993 தொகையான மொத்த இலாபம் மற்றும் ரூபா 10,785,423 தொகையான தேறிய இலாபம் என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் விதத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதற்கு உரித்தான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பட்டோலைகள்.

(இ) நிலையத்தின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 183,599,926 தொகையான 16 கணக்கு மீதிகள் குறிப்பாக இனங்காணப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்காக பாதுகாப்பு சேவை வழங்கப்படுவதற்காக சதோச பொருளாதார சேவைகள் தனியார் நிறுவகத்திற்கு ரூபா 167,900 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவிற்காக உரிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விபரம், கடமைக் கால அட்டவணை தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தவறியிருந்தது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக் சதொச விற்கு ஒப்படைக்கப்பட்ட வெலிசர களஞ்சியத் தொகுதியில் காணப்பட்ட ரூபா 126,156,746 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக எவ்வித பணமும் அறவிடப்படுவதற்கு 2016 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நான்கு வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து 149 நிறுவகங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் நிலையத்திற்குக்

கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா 77,257,552 தொகையான வாடகை வருமானத்தை அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 ஒக்டோபர் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் 2005 ஆம் ஆண்டுகளின் போது அரிசி மற்றும் கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதற்காக திறைசேரியின் பிணையில் அரச வங்கி ஒன்றால் நிலையத்திற்குக் கிடைக்கப்பெறவேண்டிய கேள்வி மனுப்பிணைக் கடனான ரூபா 207,050,943 தொகை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற 4 மாதங்களுக்கு உரித்தான பொதியிடற் கட்டணமான ரூபா 864,429 தொகை 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை லங்கா சதொச வினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆம் ஆண்டிற்காக வருடாந்த குத்தகை வாடகை மற்றும் தேசிய பானங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமாக லங்கா சதொச நிலையத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 71,561,640 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கோ அல்லது கணக்குகளிற்கு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ)	1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 2.2(அ) ஆம் பிரிவு	தாபனத்தில் நிதி முதலீடு செய்யப்படுகையில் தற்போதுள்ள பொதுக் கம்பனிகளில் மாத்திரமே செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணான வகையில் ரூபா 10 பெறுமதியான பெயரளவு முதலீடு ஒன்று

மேற்கொள்ளப்பட்டு வரையறுக்கப்பட்ட சதொச பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனியின் பெயரில் அரச கம்பனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு நிலையத்தில் இருந்து சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 6.5.1 ஆம் பந்தி	நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 8.3.9 ஆம் பந்தி	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக உரிய அமைச்சும் ஏனைய 03 நிறுவகங்களிற்காக ரூபா 1,366,958 கூட்டுத்தொகையான செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3:1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் தேறிய நட்டம் ரூபா 661,602,751 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டில் ரூபா 313,605,785 தொகையான தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 347,996,966 தொகையால் அதாவது 111 சதவீதத்தால் தாபனத்தின் தேறிய நட்டம் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 50,645,942 தொகையால் அதாவது 36 சதவீதத்தால் அதிகரித்திருந்த

போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 404,172,306 தொகையால் அதாவது 78 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை தேறிய நட்டம் இவ்வாறு அதிகரிப்பதற்குக் காரணமாகியிருந்தது. செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை குறித்து ரூபா 378,003,569 தொகையான நட்டக் கழிவு காரணமாகியிருந்ததுடன் இது செயற்பாட்டுச் செலவினத்தில் 94 சதவீதமாகும்.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

விபரமான வருமானக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட விபரமான வருமானக் கூற்றின் படி, முக்கியமான விகிதங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

	2012	2011
இலாப விகிதம்		
- மொத்த இலாப விகிதம் (நூற்றிற்கு)	16	21
- தேறிய இலாப விகிதம் (நூற்றிற்கு)	(305)	(246)

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளய்வாண்டின் தேறிய இலாபம் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் தேறிய இலாபம் 59 சதவீதத்தால் அதிகரித்தமையால் தாபனத்தின் நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் படி, முக்கிய விகிதங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

	2012	2011
திரவ விகிதம்		
- நடைமுறை விகிதம்	0.54:01	0.48:01
- உடன் சொத்து விகிதம் (நூற்றிற்கு)	0.42:01	0.40:01

i. மீளாய்வாண்டின் போது தாபனத்தின் நடைமுறை விகிதம் 0.54:01 தொகையாகவும் விரைவுச் சொத்து விகிதம் 0.42:01 ஆகவும் காணப்பட்டமையால் குறுங்காலப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்குள்ள இயலாமை அதாவது திரவத்தன்மை சிக்கலான நிலைக்கு உள்ளாகியிருந்தது.

ii. தாபனத்தால் தொடர்ந்து நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் நிறுத்தி வைத்திருந்த உழைப்புகள் மறைப் பெறுமதிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் தொழிற்படு மூலதனம் தொடர்ச்சியாக செலவிடப்பட்டு அதிவீழ்ச்சி நிலை ஒன்று நிலவுவது அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

(அ) எம்பிலிப்பிட்டிய சந்தையில் 2012 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களில் பிளாஸ்டிக் கூடைகளின் விற்பனையால் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற பங்கு வருமானம் ரூபா 27,668 தொகையான போதிலும் இதற்கான சம்பளக் கிரயம் மாத்திரம் ரூபா 136,296 தொகையானமையால் ரூபா 108,628 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) தாபனத்திடம் இருந்த 32 விற்பனை நிலையங்களும் களஞ்சியக் கட்டிடங்களும் அரச கம்பனியான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் கட்டிட வாடகை தொடர்பாக அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து ஓர் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) தாபனத்தால் 2010 நவம்பர் 03 ஆம் திகதி வரையிலும் ரூபா 51,718,227 தொகையான சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அறவீடுகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 5,097,455 பெறுமதியான 12 "இழுவை இயந்திரங்களின்" மின் மோட்டர்கள் காணாமற் போனமை குறித்து சொத்துக்களின் பாதுகாப்பு, பொறுப்பு ஒப்படைப்பு போன்றவற்றை நிர்ணயிப்பதற்காக அது தொடர்பான முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனத்தால் 1999 ஆம் ஆண்டின் போது இன்கிரின் இன்ஸ்டிடியூட் ஒப் பிரின்டிங் அன்ட் கிரபிக்ஸ் கம்பனியின் ரூபா 9,923,710 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அக் கம்பனி தொடர்ந்து நட்டத்தை ஏற்றிருந்தமையால் 2006 ஒக்டோபர் 23 ஆம் திகதி நீதிமன்றத் தீர்ப்பின் படி கலைக்கப்பட்டிருந்தது. ஆகையால் முதலீடு செய்யப்பட்ட தொகையை மீளப்பெறுவது தொடர்பில் நிச்சயமற்ற நிலை நிலவியது.

(ஊ) தாபனத்தால் 1999 ஆம் ஆண்டின் போது சதொச சில்லறை கம்பனியில் ரூபா 171,928,690 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 1999 முதல் 2012 ஆம் ஆண்டு வரை எவ்வித இலாபத்தையும் தாபனம் பெற்றிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டுத் செயற்திறமையீனங்கள்

2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதியின் போது பொதியிடற் பிரிவின் வருமானம் ரூபா 864,429 தொகையான போதிலும் அதன் ஊழியர் தரப்பினருக்காக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் நாளாந்த படிப்பணமாக ரூபா 2,101,077 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபன ஸ்தாபிப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அல்லது ஏனைய சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிராத மற்றும் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,139,279 தொகையும்

மீளாய்வாண்டின் போது ரூபா 1,311,943 தொகை சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் மாதம் வரையில் அப் பெறுமதி ரூபா 4,691,272 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான ஹிங்குரக்கொடவில் உள்ள 02 களஞ்சியங்களிற்கு உணவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ரூபா 78,978,504 தொகையான செலவினம் ஏற்கப்பட்டு இரண்டு ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

4.4 வெளிப்படையான முறைகேடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட கட்டிடப பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 105,725 தொகையான பொருட்கள் சதொச நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்றமை குறித்து உறுதிப்படுத்தல்கள் இன்றி பட்டியல்களின் போட்டோப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு 2012 நவம்பர் 12 மற்றும் 2012 திசெம்பர் 03 ஆம் திகதிகளின் போது பகுதியளவில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) தாபனத் தலைவரின் சொந்த வீட்டிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் ஈடுபடுத்தப்பட்டு 2012 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களிற்காக சம்பளமும் படிப்பணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் நிலையத்திற்கு ரூபா 656,311 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அத் தொகையை அறவிடுவதற்கு 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின் போது புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓர் உத்தியோகத்தருக்கு நிலவும் சட்டங்கள் விதிகளிற்கு முரணான வகையில் சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமையால் ரூபா 131,670 தொகையான சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன்

கணக்காய்வுத் தினமாகிய 2015 செப்தெம்பர் வரையில் அப் பெறுமதி ரூபா 506,000 ஆக அதிகரித்திருந்தது.

(ஈ) நாளாந்த செலவினத் தேவைப்பாடுகளை இனங்காணப்படாது இரத்தினபுரி இருப்புக் களஞ்சியத்தின் செயற்பாட்டு உத்தியோகத்தருக்கு சில்லறைக் காசு முற்பணமாக ரூபா 25,000 தொகை 2012 சனவரி மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரை ரூபா 6,251 செலவிடப்பட்டிருந்தமையால் மிகுதிப் பணமான ரூபா 18,749 தொகை பௌதீக மெய்மையாய்வின் போது கணக்காய்வு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு காசாளர் தவறியிருந்தார். இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவிக்கப்படுவதற்கு முகாமைத்துவம் 2015 நவம்பர் மாதம் வரையிலும் தவறியிருந்தது.

(உ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாறாக ஒப்பந்த அடிப்படையில் 2011 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் களஞ்சிய நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தார். 2011 ஆம் ஆண்டின் இறுதியில் இக் களஞ்சியத்தில் இருப்புச் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கையில் குறித்த உத்தியோகத்தர் கடமைக்குச் சமூகமளிக்காத நிலையில் 2012 ஆம் ஆண்டிற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 17,540 படி ரூபா 210,480 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் நான்கு கணக்காளர்களின் சேவை பெறப்பட்டு சம்பளங்களும் படிப்பணமுமாக ரூபா 3,244,869 தொகை செலுத்தப்பட்டிருக்கையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்படுவதற்காக ரூபா 613,520 தொகையான பணம் செலுத்தப்பட்டு பட்டயக் கணக்காளர் கம்பனி ஒன்றின் சேவை பெறப்பட்டிருந்தது.

4.6 மறுசீரமைப்புக் கொடுக்கல்வாங்கல்கள்

2003 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2003 திசெம்பர் 01 ஆம் திகதியில் உள்ளவாறு 6 வணிக வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 5,493 மில்லியன்

தொகையான கடன் தொகையில் ரூபா 4,397 மில்லியன் செலுத்தப்பட்டு தீர்க்கப்படுவதற்கு வணிக வங்கி உடன்படுத்தப்பட்டு இதற்காக 13 ஆண்டில் முதிர்வடையும் திறைசேரி முறி உரிய வணிக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது.

அத்தகைய திறைசேரி முறி நிலையத்தின் நிலையான சொத்துக்களில் ரூபா 1800 மில்லியன் தொகையான சொத்துக்கள் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவால் விற்பனை செய்யப்பட்டு பெறப்படும் தொகையில் 2005 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்படுவதற்கும் அம் முறி கடனுக்காக அரையாண்டு வட்டிக் கொடுப்பனவிற்கும், செலுத்தப்பட வேண்டிய வட்டியில் 50 சதவீதம் திறைசேரியால் ஏற்கப்படுவதற்கும் எஞ்சிய 50 சதவீதம் சதொச வின் ஆதனம் சதொச ரிடேல் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்படுவதனால் கிடைக்கும் வாடகை வருமானத்தில் செலுத்தப்படுவதற்கும் உடன்பட்டிருந்த போதிலும் மறுசீரமைப்பின் கீழ் திறைசேரி முறிக்கான பொறுப்பைத் தீர்ப்பதற்கு, பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொத்துக்களின் ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2004 பெப்ரவரி 03 ஆம் திகதிய 04/0103/136/007/EPC/710 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, நிலையத்தைக் கலைப்பதற்கும் தனியார் மயமாக்கப்படுவதற்கும் எடுக்கப்பட்ட தீர்மானம் 2004 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 04/0892/012/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன் படி, 8.5 சதவீத கழிவு வீதத்தின் கீழ் திறைசேரி முறிகளில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறை மீதியான ரூபா 3,173 மில்லியனும், ரூபா 1,224 மில்லியனுமான கழிவு மீதியும் சேர்க்கப்பட்டதை அடுத்து பெறப்பட்ட அந்த ரூபா 4,397 மில்லியன் தொகையான முதிர்வு மீதிக்கு, கடன் தொகை தீர்க்கப்படுவதற்காக சதொச ரிடேல் கம்பனியின் கடன் உரிமையாளர்களும் மேற்குறித்த 06 வங்கிகளில் 03 வங்கிகளுக்கு மேலும் திறைசேரியால் செலுத்தப்பட்ட பெறுமதிக்காக திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 200 மில்லியன் தொகையுடன் ரூபா 4,597 கூட்டுத்தொகை பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

இதற்கு உரித்தாக திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய திறைசேரி வட்டிப் பொறுப்பான ரூபா 2,806,167,798 தொகையான பெறுமதி "சதொச முறிக்காக செலுத்தப்பட வேண்டியது" எனும் பெயரில் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் இச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,597 மில்லியன் தொகையில் ரூபா 200 மில்லியன் தொகையான மீதி திறைசேரிக்கு பெறவேண்டிய பெறுமதியா என்பது குறித்து திறைசேரியால் உறுதிப்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்ததுடன் ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் மறுசீரமைக்கப்பட்டவையாக ரூபா 66,363,460 தொகை காண்பிக்கப்பட்டமை மறுசீரமைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் முறையாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட அல்லது சீராக்கப்பட்டிராததுடன் மறுசீரமைக்கப்பட்ட பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் "ஏட்டுப் பதிவாக" காண்பிக்கப்பட்டிருந்தது.

4.7 பதவியணியினர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக ஓர் நிதியத்தைக் கட்டியெழுப்புதல்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் படி, பணிக்கொடைக்காக 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 33,700,618 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்காலக் கொடுப்பனவுகளை எதிர்கொள்வதற்காக அவ் ஏற்பாடுகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் நிலையத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2 ½ ஆண்டுகளிற்கு அண்மித்த காலதாமதத்தின் பின்னர் 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையத்தின் நோக்கையும் செயற்பணியையும் மேற்கொள்வதற்காக 2012 முதல் 2014 வரை

உள்ளடங்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது காலக்கிரமத்தில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

5.3 **செயல்நடவடிக்கைத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 142 ஆம் இலக்க அரச பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 **உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வாளரின் உதவிப் பதவியணியினர் நியமிக்கப்பட்டிராமையால் போதிய கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது எவ்வித உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவோ அல்லது அறிக்கையின் பிரதியோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 **கணக்காய்வுக் குழு**

2005 யூலை 01 ஆம் திகதிய PED/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மாதங்களிற்கு ஒரு தடவையாயினும் கணக்காய்வுக் குழக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது 2 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

5.6 **தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2006 செப்தெம்பர் மாதத்தில் நிலையத்தால் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 14,501,998 பெறுமதியான அரிசி பதனீட்டிற்கான 140 இயந்திரங்கள் 2015 நவம்பர் வரையிலும் நிலையத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இதன் படி, பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) குத்தகை வருமான அறவீடுகள்

(உ) பதவியணி முகாமைத்துவம்

(ஊ) உள்ளகக் கணக்காய்வு

(எ) சட்ட நடவடிக்கைகள்

ஒப்பம்:- எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
Ms/v

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2) இன் நியதிகளின்படி 2012 டிசம்பர் 31 இலுள்ளவாறான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான விடைகள்

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை

31.12.2012 ஆம் திகதியிலுள்ளவாறு சொத்துக்கள் ரூபா.7.4 பில்லியன் எதிர்மறைப் பெறுமதியினைக் கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2014.12.31 ஆம் திகதிய மீள்மதிப்பீட்டின்படி, நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியானது ரூபா.2.1 பில்லியன் வரையில் குறைவடைந்துள்ளது. 2012.12.31 ஆம் திகதியில் கிடைக்கக்கூடியதாக உள்ள பிணை முறியின் பெறுமதி ரூபா.4397 ஆகும். பொதுத் திறைசேரியானது பிணை முறியின் முதிர்வின் போதான உரிய கொடுப்பனவுகளுக்கு பிணை முறிகளினை வழங்கியுள்ளது. 1 ஆகையால், பொதுத் திறைசேரியானது உடன்படிக்கையின்படி, குறித்த பிணை முறிகளின் முதிர்வின் போது கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளினை எடுத்துள்ளது. (உடன்படிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதியானது ரூபா.2.419 பில்லியனாக காணப்படும் அதேவேளையில், நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா.1.323 பில்லியனாக இருந்துள்ளது.

மேலும், லங்கா சதொசவின் தாபித்தலின் போதான அமைப்பு அகவிதியின்படி, கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது லங்கா சதொசவினூடாக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய 2015 ஆம் ஆண்டளவில் தகரத்திலடைக்கப்பட்ட மீன், வெள்ளைப் பச்சை அரிசி, சொப்பிங் பைகள், தேயிலை, பழுப்பு சீனி என்பவற்றினை வழங்குவதற்கு ஆரம்பித்திருந்தது. அரசாங்கத்தின் ஏனைய நிதி உதவுகையின்றி நிறுவனத்தினை நிதி ரீதியாக நிலையாகப் பேணுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், லங்கா சதொசவிற்கான பொருட்களினை வழங்கும் பொருட்டு 2016 மே இலிருந்து திறைசேரி முறிகளின் கீழ் இறக்குமதி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளினை ஆரம்பிக்கவுள்ளது.

அத்துடன், 2016 மே இலிருந்து பாகிஸ்தானுகான வெற்றிலை ஏற்றுமதி தொடர்பில் உரிய அக்கறைதாரர்களுடனான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

2014.12.31 இலுள்ளவாறான கணக்குகளினைத் தயாரிக்கும் போது (அ), (ஆ), சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. சர்வதேச கணக்கீட்டு நியமங்களின் நியதிகளின்படி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான

கணக்குகளில் அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் தங்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் சரி செய்யப்பட்டுள்ளன என்பதனையும் நான் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

2.2.3 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

(அ) (i) தயானந்த சமரவிக்கிரம அன்ட் கம்பனியின் பட்டயக் கணக்காளர்களினால் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் இணைப்பு 01 ஆக இணைக்கப்பட்டுள்ளன.

(ii) 2012 ஜூலையிலிருந்த நெருக்கடி மிகுந்த கணக்கீட்டு முறைமை மற்றும் குறித்த ஆண்டின் ஆரம்ப மாதங்களுக்குரிய வவுவச்சர்கள் என்பன முறைமைக்குள் புகுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அனைத்துக் கொடுப்பனவுகளும் காசேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். மேலும், உரிய கொடுப்பனவுகள் தொடர்பான வங்கி கணக்கிணக்கங்களினைத் தயாரிப்பதற்கும் அவற்றினை அரசாங்க கணக்காய்வின் அத்தியட்சகருக்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(iii) மேலே விடை (ii) உடன் தொடர்புடையது.

(iv) அது தொடர்பான அட்டவணைகள் கிடைக்கப் பெற்றதும் அதற்கான விடைகள் அளிக்கப்படும்.

(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது திறைசேரியினால் மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பிணை முறியின் கீழ் கோதுமை மாவினை இறக்குமதி செய்திருந்ததுடன் அதற்கான கொடுப்பனவினை மக்கள் வங்கிக்கு மேற்கொள்வதில் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் தாமதித்தமையால் திறைசேரியானது 2005 இல் மக்கள் வங்கிக்கு ரூபா 275 மில்லியனை நேரடியாக செலுத்தியிருந்தது. அதேநேரத்தில், உரிய அறவிட்டுக் கணக்கு மறுசீரமைப்புக் கணக்கில் “செலவு” மற்றும் “வரவு” வைக்கப்பட்டது. மக்கள் வங்கி மற்றும் பொதுத் திறைசேரி என்பவற்றிடமிருந்து உரிய ஆவணங்களினைப் பெற்ற பின்னர் முறையான கணக்குப் பதவியிலினை மேற்கொள்ள முடியுமென அறியத்தருகின்றேன்.

(இ) கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில், கணக்காயவாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேர்ந்த கணக்காய்வுக் கட்டணங்க்ள தொடர்பான விலைப் பட்டியல்களினைக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமாக இருந்துள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் சேர்ந்த கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பில் மூல ஆவணங்கள் கோரப்பட்டுள்ள போதிலும், அவைகள் இன்னமும் பெறப்பட்டிருக்காமையினால் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான உரிய ஆவணைங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் முறையான கணக்குப் கணக்குப் பதிவு முன்னெடுக்கப்படுமென தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

(ஈ) அரசாங்க கணக்காய்வு பிரிவிலிருந்து உரிய விபரங்களினைப் பெற்றதன் பின்னர் இதற்கான பதில்கள் அனுப்பி வைக்கப்படும்.

(உ) அத்தகைய இரண்டு விலைப்பட்டியல்கள் காணப்படவில்லை என்பதுடன் லங்கா சதொசவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களின் குறிப்புக்களின்படி, பின்னர் இது தொடர்பில் சரி செய்யப்பட்டுள்ளது. உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை.

(ஊ) மேற்கூறப்பட்ட இரண்டு விலைப்பட்டியல்களும், பொருட்களின் பெற்றுக் கொண்ட எண்ணிக்கைக்குச் சான்றாக லங்கா சதொசவினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களின்படி சீர் செய்யப்பட்டுள்ளன.

(எ) 2011 ஆம் ஆண்டுக்கென பெறப்பட வேண்டிய வாடகையானது லங்கா சதொசவின் கணக்கில் “வரவு” வைக்கப்பட்டுள்ள அதேவேளையில், வாடகை வருமானக் கணக்கில் “செலவு” வைக்கப்பட்டதுடன் வாடகையானது லங்கா சதொசவினூடாக அறவிடப்பட்டுள்ளது. மேலும், 2005 ஆம் ஆண்டிலிருந்து சதொசவின சொத்துக்களினை மாற்றுதல் மற்றும் நிலுவையாயுள்ள வாடகை சார்பில் லங்கா சதொசவினால் பங்குகள் விடுவிக்கப்படும் என்பதுடன் 22.7 மில்லியன் பங்குகள் வாடகை நிலுவைகளின் பகுதியாக ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன. இது 2014 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.4 விளக்கமளிக்கப்படாத மாற்றங்கள்

(அ) உரிய ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு விடையளிக்கப்படும்.

(ஆ) நெல் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நெல் இருப்புக்களுக்கான கொடுப்பனவு கணக்கிணக்கம், அவற்றின் செலவு மற்றும் விலையிடலின்படியான மாற்றம் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதியானது கணக்குகளினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.5 பெறத்தக்க மற்றும் செலுத்தத்தக்க கணக்குகள்

(அ) அத்தகைய கையளிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் நிலுவையாகவுள்ள வாடகை என்பவற்றின் பெறுமதி ரூபா.121 மில்லியனாகும். இது பெறத்தக்க வாடகை வருமானம் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதி என்பனவற்றினைக் கொண்டுள்ளது. 2005 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் நிலையான சொத்துக்களினை நீக்குவது தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் அதற்கமைய சீராக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து பெறத்தக்க பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களின் இல.17 ”முதலிட்டுகான முற்பணம்” எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சொத்துக்கள் பௌதீக ரீதியாக பட்டயம் பெற்ற பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்த வாடகையினை அறவீடு செய்வதற்கான உடன்படிக்கையின் பிரதிகளையோ அல்லது விலைப்பட்ட்டியல்களினை பிரதிகளையோ கண்டுபிடிப்பது சிரமமானதாக உள்ளதால் மீதிகளினை உறுதிப்படுத்தி அவர்களின் முகவரிகளினைக் கண்டு பிடித்து உரிய மீதிகளினைச் செலுத்துமாறு உள்ளக கணக்காய்வாளர்கள் கடிதங்களினை அனுப்பி வைத்துள்ளார்கள். எவ்வாறாயினும், நிருவாகப் பிரிவானது வாடகை வருமானத்தினைப்

பெற்றுக் கொள்வது தொடர்பில் உரிய நடவடிக்கைகளினை எடுத்து வருகின்ற அதேவேளையில், நிலுவையாகவுள்ள கடன்களை அறவீடு செய்வதற்கு பதில் பொது முகாமையாளரினூடாக அறிக்கையொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்ட விடை.

(ஈ) மக்கள் வங்கியானது 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் கோதுமை இறக்குமதிக்கென திறைசேரி உண்டியல்கள் மூலமாக கடன்களை வழங்கியிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் கோதுமை மா இறக்குமதி நட்டமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் இத்தகைய கொடுப்பனவுகள் மீதியாகவுள்ளன. எவ்வாறாயினும், மக்கள் வங்கியானது, 2014 இல் திறைசேரியினால் செலுத்தப்பட்டுள்ள ரூபா.50 மில்லியனுக்கான சான்றாக மீதியினை உறுதிப்படுத்தும் கடிதங்களை அனுப்பி வைவத்துள்ளதுடன் குறித்த கொடுப்பனவுகளின் விபரங்களை நாம் கோரியுள்ள போதிலும் அவை இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. எனவே, ரூபா.50 மில்லியன் கொடுப்பனவு தொடர்பான கணக்கீடானது, நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீதி உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தில் மட்டுமே குற்றப்பணம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கணிப்பீடுகளினை நாம் இன்னமும் பெற்றிருக்காமையினால் இன்னமும் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. சேர்ந்த வட்டியானது வருடாந்தம் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.2.6 கணக்காய்வு செய்யப்பட்டமைக்கான போதிய ஆதாரமின்மை

(அ) கணக்காய்வுக்காக குறித்த விபரங்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உரிய அலுவலர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய கடிதங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், மோட்டார் வாகனங்களுக்கான குத்தகை உடன்படிக்கைகள் கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டினை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) பரீட்சிக்கப்பட்டு விடைகள் அனுப்பி வைக்கப்படும்.

(இ) பல வருடங்களுக்கான கணக்குகளில் உள்ள இத்தகைய மீதிகள் முன்னொண்டு வரப்பட்டுள்ளதுடன் இவை “நீண்ட கால வருமதிகள்” என நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல.27.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ருபா.383 மில்லியனில் ரூபா.200 மில்லியன் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல.27.2.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.7 <u>சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை</u>

(அ) இது கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஓர் துணைக் கம்பனியாகும். இதன் கணக்குகள் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் கணக்குகளுடன்

கூட்டிணைக்கப்பட்டுள்ளன. இவற்றினைக் கண்காணிப்பதற்கு அலுவலர்க்ள நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ)

(I) நி,பி.135 இன் நியதிகளின்படி, அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

(ii) நி.பி. 231 (1) மற்றும் (2) இன் நியதிகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள கோவைகளில் கொடுப்பனவு வவுச்சர்களின் விபரங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தயவு செய்து 2.2.3 (அ) ii இனைப் பார்க்கவும்

பழைய AS 400 கணக்கீட்டு முறைமையினூடாக வழங்கப்பட்ட வவுச்சர் இலக்கம் உள்ளடங்கலான வவுச்சர்கள் மற்றும் புதிய பிசி கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையினால் வழங்கப்பட்ட வவுச்சர் இலக்கம் என்பன கோவையிடப்பட்டுள்ளன.

(iv) சி.பி. 262 (1) இன் நியதிகளின்படி, அனைத்துக் கொடுப்பனவுகளும் குறித்த மாத்திலேயே கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன. குறித்த அதே தினத்திலேயே வுச்சர்களை கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) (i) குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) குறித்த ரூபா.1,366,958/- உடன் தொடர்புடைய தகவல்களை கணக்காய்வுப் பிரிவிலிருந்து கிடைக்கப்பெற்றதும் அனுப்பி வைக்கப்படும் என்பதனை தங்களுகு அறியத்தருகின்றேன்.

3 <u>நிதிசார் மீளாய்வ</u>

3.1 <u>நிதிசார் பெறுபேறுகள்</u>

இந்த நட்டத்திற்கான முதன்மைக் காரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் சார்பில் ரூபா.323.8 மில்லியன் பிணை முறிக்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட வட்டிப் பெறுமதி மற்றும் பெறுமதிக் குறைவுக்கான ஏற்பாடுகளின்படி, ரூபா 378 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 09)

3.2 <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>

நான் இதனைக் கவனத்தில் எடுத்துள்ளேன்.

4.1 முகாமைத்துவக் குறைபாடுகள்

(அ) பொருளாதார நிலையக் கட்டிடம் வாடகையின்றி கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது ஏற்கனவே மீளளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அமைச்சின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. கடன் அடிப்படையில் பிளாஸ்ரிக் குடைகளை வழங்குவதற்கான பணத்தினை அறவிடும் நடவடிக்கையானது கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் கையாளப்படுகின்றது.

(இ) நான் குறிப்பிட்டுள்ளேன்.

(ஈ) பட்டய பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரிடமிருந்து பெறுமதி மதிப்பீடானது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(உ) குறித்த சூழ்நிலையினை ஆய்வு செய்து தீர்வு காண்பதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. லங்கா சதொச நிறுவனமானது மீதியினை வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கையினை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

(ஊ) 2012 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களும் செலுத்தப்பட்டுள்ளன.

(எ) 2014.03.07 ஆம் திகதியன்று COPE குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் COPE செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

4.2 முரண்பாடான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கடன்களை அறவீடு செய்வதற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போது லங்கா சதொச குறித்த கொடுப்பனவுகளை ஒழுங்கமைக்கும் பொருட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வதுடன் தொடர்புடைய ஆவணங்களைப் பரீட்சிக்கும் செயற்பாட்டில் தற்போது ஈடுபட்டு வருகின்றது.

(ஆ) தற்போது, ஒரு பொதியிடலுக்கு ரூபா.123 செலுத்தப்பட்டு வருவதுடன் இந்தப் பெறுமதியினை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கருத்திட்டத்திற்கு பதவியணியின் மிகையானது ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

(இ) குறித்த பதவியானது குறிப்பிடப்பட்டிருக்காமையினால் இது தொடர்பில் உறுதியாக விடையளிக்க முடியாதுள்ளது. 2013 ஏப்பிரலில் கூட்டுறவு மொத்த

விற்பனை தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டுள்ளது.

(d) நான் குறிப்பிட்டுள்ளேன். விரைவில் அவற்றிற்கு விடையளிக்கப்படும்.

4.3 புலப்படக்கூடிய முறைகேடுகள்

(அ) நான் குறிப்பிட்டுள்ளேன். நான் இதனை ஆய்வு செய்து அதற்கான பதில்களை அனுப்பியுள்ளேன்.

(ஆ) நான் குறிப்பிட்டுள்ளேன். நான் இதனை ஆய்வு செய்து அதற்கான பதில்களை அனுப்பியுள்ளேன்.

(இ) இது அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் கொடுக்க வேண்டிய சம்பள ஏற்றங்களை இடைநிறுத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைக்கு சமமாக)

(ஈ) குறித்த சில்லறைக் காசானது முறையாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் குறித்த கணக்காய்வு விசாரணைகளை ஆய்வு செய்த பின்னர் அது குறித்த பதில்களை அனுப்பி வைப்பேன் என அறியத் தருகின்றேன்.

4.4 <u>செயற்பாடற்றதும் பயன்பாடற்றதுமான சொத்துக்கள்.</u>

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது பெருமளவிலான களஞ்சியங்கள் மற்றும் வேலைத் தளங்களைக் வைத்திருப்பதால், தேவைக்கேற்றவாறு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் களஞ்சியங்கள் மற்றும் ஆட்கள் தொடர்பில் சரியான விபரத்தினைத் தருவது இயலாத காரியமாகும்.

4.5 <u>சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்</u>

நான் குறிப்பிட்டுள்ளேன்.

4.6 <u>மறுசீரமைப்பு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்</u>

2012 ஆம் ஆண்டுக்கான கணக்குகளிலுள்ள குறிப்பு இல.24 ஆனது பிணை முறியின் பெறுமதியானது 4597 அல்ல 4397 எனக் குறிப்பிடுகின்றது. ரூபா 66 மில்லியனுடன் தொடர்புடைய கோவையினை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தினை கண்டுபிடிக்க இயலாமையினால், அதன் பெறுமதிகள் மற்றும் செலுத்தத்தக்க தரப்புக்கள் என்பன தொடர்பில் வெளிப்படுத்தப்படிருக்கவில்லை. இது நிதிக் கூற்றுக்களின் ஏனைய கொடுப்பனவுகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.

4.7 <u>ஊழியர்களின் பணிக்கொடைக்கான நிதியத்தினைத் தாபித்தல்</u>

நான் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளதுடன் 2016 இல் நடைமுறைப்படுத்தப்படும்.

5 கணக்கீடும் நல்லாட்சியும்

5.1 நிதிக் கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

தொடர்புடைய நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிலிருந்நது சீரமைக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர்கள் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்ச்சியாக பல வருடங்கள் நிலுவையாக உள்ளமை தொடர்பில் எவ்வித கருத்துரைகளினையும் வழங்கவில்லை.தாமதங்கள் எற்பட்டுள்ளமையினை நான் அறியத் தர விரும்புவதுடன் கணக்குகள் தொடர்பான சரியான அறிக்கைகளினைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

5.2 <u>கூட்டுறவு செயல்திட்டம்</u>

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின்படி, 2014 ஆம் ஆண்டிலிருந்து அவற்றினை சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5.3 <u>செயல் திட்டம்</u>

சரி செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.4 <u>உள்ளக கணக்காய்வு</u>

உரிய முகாமைத்துவ அறிக்கைகள் உள்ளக கணக்காய்வாளருக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டது.

5.5 <u>கணக்காய்வுக் குழுக்கள்</u>

குறித்த ஆண்டு காலப்பகுதியில் இரண்டு கணக்காய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

5.6 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்

அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவகத்திலிருந்து (IPHT) அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதுடன் இத்தகைய இயந்திரங்கள் தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அமைச்சின் ஆலோசனையினைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

6 <u>முறைமையும் நிருவாகமும்</u>

நான் குறிப்பிட்டுள்ளேன்.